

புதுக்கோட்டை மாவட்டம்/மாநகராட்சி, கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், உயர்கல்வித் துறை சார்பில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக "உலகம் உங்கள் கையில்" என்னும் மாபெரும் திட்டத்தின்கீழ், 2ஆம் ஆண்டு பயிலும் மாணவிகளுக்கு மடிக்கணினிகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 11.02.2026 அன்று வழங்கினார். உடன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர்.கே.நிர்மலா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### நிவேதா எம் முருகன் எம்.எல்.ஏ., தலைமை ! குண்டாமணி (எ) என்.செல்வராஜ் வரவேற்புரை!

# மயிலாடுதுறை தொகுதியில் 'தமிழ்நாடு தலைகுனியாது' சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - கம்பம் செல்வேந்திரன் சிறப்புரை !

## குத்தாலம் பி.கல்யாணம் - எம். பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

மயிலாடுதுறை, பிப்.13

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை சின்ன கடைவீதியில் மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி தமிழ்நாடு தலைகுனியாது திராவிட மாடல அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை நகர கழக செயலாளரும், நகர் மன்ற தலைவருமான குண்டா மணி (எ) என். செல்வராஜ் வரவேற்றார். ஒன்றிய கழக செயலாளர் மயிலாடுதுறை மேற்கு மூவலூர் எம்.மூர்த்தி, மயிலாடுதுறை வடக்கு என்.இளையபெருமாள், மயிலாடுதுறை மத்தியம் ஞான.இமயநாதன், மயிலாடுதுறை கிழக்கு ப.முருகமணி, குத்தாலம் வடக்கு கு.வைத்தியநாதன், பேரூர் கழக செயலாளர் மணல்மேடு என். அண்ணாதுரை, குத்தாலம் எம். சம்சுதீன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது மயிலாடுதுறை நகர கழக நிர்வாகிகள் ஆர். நடராஜன், மலைக்கோயில் எம்.பிரபாகர், ஆர்.கே.சங்கர், வை.தெய்வநாயகம், மேனகாமாரியப்பன், எம். குமார் ஆகியோர் முன்னிலை வைத்தனர். கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன், தலைமைக் கழக பேச்சாளர் கம்பம் செல்வேந்திரன், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் மாநில விவசாய தொழிலாளர் அணி இணை செயலாளர் ஜெகவீரபாண்டியன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம். ஸ்ரீதர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.எம். ரவி, இராம.இளங்கோவன், மாவட்ட கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணை செயலாளர்கள் மு.ஞானவேலன், கண்ணகி பன்னீர், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், எஸ். சங்கரநாராயணன், நத்தம் ஏ.வின்சென்ட், ஹர்ஷத், மாவட்ட சார்ப அணிகள் அமைப்பாளர்கள் இரா. மேனோகரன், சாந்தி ராமலிங்கம், தீபாசத்தியந்திரன், ஆர்.செல்வராஜ், வி.எஸ். பிரபாகர், டி.ராஜ்குமார், எஸ். எம்.சம்சுதீன், அறிவு (எ) அறிவிச்செல்வன், ஆர். எஸ்.ஸ்ரீதர், பெரு .வீரமணி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர். எஸ்.சக்திவிஜய் மற்றும் ஒன்றிய, நகர . பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், நகர் மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள், பிரதிநிதிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர் முடிவில் மாவட்டகழகப் பிரதி எஸ் எஸ்.குமார் நன்றி கூறினார்.

### நாகை, கீழ்வேளூர், வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதிகள் அளவில்

# வெல்லும் தமிழ்ப்பெண்கள் - ஸ்டாலினின் மகளிர்படை பரப்புரை பயிற்சிக் கூட்டம்!

## நாகை மாவட்டக் கழக செயலாளர் என். கௌதமன் அறிக்கை!



நாகை. பிப்.13-

நாகை மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, நாகை மாவட்டத்திற்கு உட்பட்ட 3 சட்டமன்ற தொகுதி அளவில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் என்ற தலைப்பில் ஸ்டாலினின் மகளிர்படை சார்பில் பரப்புரை நிகழ்விற்கு பாகத்திற்கு ஒருவரை பொறுப்பாளராக தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இல்லம் தோறும் பரப்புரை பற்றிய பயிற்சி கூட்டம் கீழ்க்கண்ட சட்டமன்ற தொகுதி வாரியாக நடைபெற உள்ளது.

அதன்படி 14.2.2026 காலை 10.00 மணிக்கு வேதாரண்யம் சட்டமன்ற தொகுதிக்கு செம்போடை வரதராஜன் திருமண மண்டபத்திலும், 14.2.2026 மாலை 3.00மணிக்கு கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதிக்கு திருக்குவளை அண்ணா பல்கலைக்கழகம் எதிரில் உள்ள கமலம் மஹாலிலும், 14.2.2026 மாலை 4.00 க்கு .நாகையில் நாகை மாவட்ட அலுவலகமான தளபதி அறிவாலயத்திலும் வெல்லும் தமிழ்ப்பெண்கள் என்ற தலைப்பில் பயிற்சி கூட்டம் நடைபெறுகிறது.

மேற்கண்ட சட்டமன்ற தொகுதி வாரியாக நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பாகத்திற்கு ஒரு . மகளிர் என தேர்வு செய்து அவர்களை கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அழைத்து வர வழிவகை செய்திட வேண்டும்.. மேலும் இக்கூட்டங்களில் அந்தந்த சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் . என்.கௌதமன் கூறியுள்ளார்.



அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், பூவந்திகொல்லை கிராமத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கும்ப)லிட் திருச்சி மண்டலம், அரியலூர் கிளை சார்பில் அரியலூர் இருகையூர் செல்லும் மகளிர் விடியல் பயண நகரப் பேருந்தினை கார்குடி, பூவந்திகொல்லை தொட்டு இயக்கும் வகையில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.



கரூர் கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனை கூட்டத்தில், மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ, பேசினார். கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச்செயலாளர் பா. கேசவன் முன்னிலையில், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பி.திலீபன் ஏற்பாட்டில், நடைபெற்ற கூட்டத்தில் எம்.எல்.ஏ. பி.ஆர். இளங்கோ, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் வெங்கமேடு சக்திவேல், வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் தாஸபிரகாஷ், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் துணை ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.





ஈரோடு மாவட்டம் மேட்டுக்கடை தங்கம் மஹாலில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா 2026 நிகழ்ச்சியை வீட்டுவசதி மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட திட்ட அலுவலர் ( ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள்) ஐ.பூங்கோதை, மாமன்ற உறுப்பினர்கள், குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் ப.சாந்தி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### கரூர் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.1.24 கோடி மதிப்பீட்டில்!

# 176 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், 82 பேருக்கு தங்க நாணயம், திருமண உதவித்தொகை!

## கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்!

கரூர், பிப்.13-

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மாற்றுதிறனாளிகள் நலத்துறை சார்பில் 176 பயனாளிகளுக்கு ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் நலத் திட்ட உதவிகள் மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உதவித் தொகை சார்பாக 82 பயனாளிகளுக்கு ரூ.1.09 கோடி மதிப்பீட்டில் தங்க நாணயம் மற்றும் திருமண நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி நலத் திட்ட உதவிகளை வழங்கினார் .

விசெந்தில் பாலாஜி பேசியதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மாற்றுத்திறனாளிகள் நலனிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் இன்றைய தினம் மாற்றுதிறனாளிகள் நலத்துறையின் சார்பாக 103 பயனாளிகளுக்கு ரூ. 104 கோடி மதிப்பீட்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், 14 பயனாளிகளுக்கு ரூ.16.10 இலட்சம் மதிப்பீட்டில் பேட்டரி வீல் சேர்களும், 21 பயனாளிகளுக்கு ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் திறன் பேசிகளும் 10 பயனாளிகளுக்கு ரூ.32.850 மதிப்பீட்டில் காதொலி கருவிகளும், 5 பயனாளிகளுக்கு ரூ.31.795 மதிப்பீட்டில் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களும்.

ஓவியப்போட்டியில் முதல் பரிசு பெற்ற 9 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.9000 பரிசு தொகை, 2ம் பரிசு பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ 3500 பரிசு தொகை, 3ம் பரிசு பெற்ற 7 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1750 பரிசு தொகையும் என மொத்தம் 176 மாற்றுத் திறணளிகளுக்கு 1247 கோடி மதிப்பீட்டில் நலத் திட்ட உதவிகளையும்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக 20252026ம் நிதி ஆண்டில் திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் பட்டம் மற்றும் பட்டயம் படித்த 55 ஏழைப் பெண்களுக்கு தலா ரூ. 50,000 வீதம் திருமண நிதிஉதவியும் மற்றும் தலா 8 கிராம் தங்க நாணயம் என மொத்தம் ரூ.77.90 இலட்சம் மதிப்பீட்டில் நலத் திட்ட உதவிகளும்.

10ம் வகுப்பு படித்த 27 ஏழைப் பெண்களுக்கு தலா ரூ. 25,000 வீதம் திருமணநிதி உதவியும் மற்றும் தலா 8 கிராம் தங்க நாணயம் என மொத்தம் ரூ.31.49 இலட்சம் மதிப்பீட்டில் நலத் திட்ட உதவிகளும் என மொத்தம் 82 பெண்களுக்கு ரூ.109 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் எம்எல் ஏக்கள் ஆர். இளங்கோ, க. சிவகாம சுந்தரி, மாவட்ட வருவாய் அலுவலர் கு. விமல்ராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) யுரேகா, துணை மேயர் .ப.சரவணன், சமூக நல அலுவலர் செல்வி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்மோகன்ராஜ், மண்டல குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ். ராஜா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் கெங்கவல்லி ஒன்றியம் கூடமலை ஊராட்சி வெள்ளையன் என்பவர் வீடு திடீரென்று மின்கசிவு ஏற்பட்டு வீடு முழுவதும் எரிந்து சேதாரம் அடைந்தது. இந்த தகவல் அறிந்ததும் கிழக்கு மாவட்ட துணை செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏவு.மான கு.சின்னதுரை அத்தியாவசிய பொருட்கள் மற்றும் நிதி உதவி வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி பொன் .தங்ராசு, பெற்றோர் –ஆசிரியர் கழக தலைவர் ராமச்சந்திரன், தர்மலிங்கம், குமாரசாமி, சபியுல்லா பெட்ரோல் சந்திரன், ஒன்றிய துணை செயலாளர் ஜெ.மணிமாறன் , கு.சங்கர் , செ.சங்கர், உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குளித்தலை கை. அங்கமுத்து

**பிப்ரவரி 13 (2014)**



தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முறையாக சட்டமன்ற உறுப்பினராக குளித்தலை தொகுதியில் போட்டியிட்டபோது, குளித்தலை நகரக் கழகச் செயலாளராக பொறுப்பேற்றிருந்த இவர், தலைவர் அவர்களின் வெற்றிக்காக பாடுபட்டவர்.

கல்லக்குடி போராட்டத்தின்போது குளித்தலையில் கைதாகி, தலைவர் அவர்களுடன் திருச்சி மத்திய சிறையில் இருந்ததோடு, 'நங்கவரம்' போராட்டத்திலும் தலைவர் அவர்களுடன் கலந்து கொண்டவர். அத்துடன் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

"மொழிப்போரில் பங்கேற்றது தனது கடமை" என்று சொல்லி, மொழிப்போர் தியாகிகளுக்கு அரசால் வழங்கப்படும் உதவித் தொகையை பெற்றுக் கொள்ளாமல் மறுத்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**